


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 04.10.2018

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- நியமனங்கள்
- விருதுகள்












## தமிழக நிகழ்வுகள்

- மூத்த குடிமக்களுக்கு சேவை மற்றும் வசதிகளை வழங்கும் சிறந்த மாவட்ட பஞ்சாயத்துக்கான "வயோஸ் ஸ்ரீத சம்மன் - 2018' விருது தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டமைப்பின் முதலாவது மாநாடு – 2018 (First Assembly of International Solar Alliance 2018), புதுடெல்லியில் விஞ்ஞான பவனில் அக்டோபர் 2 அன்று நடைபெற்றுள்ளது.
    - இந்த மாநாட்டின் சிறப்பு விருந்தினராக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் (Antonio Guterrors ) ஆன்டோனியோ கட்டரஸ் பங்கேற்றார்.
    - இம்மாநாட்டில், 2030ம் ஆண்டுக்குள், நமது மின்சார தேவையில் "40 சதவீதத்தை சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் பூர்த்தி செய்ய" இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- குறிப்பு:
    - 2015ம் ஆண்டு இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து சூரிய மின்சக்தியை ஊக்குவிக்கும் விதமாக சர்வதேச சூரிய மின்சக்தி அமைப்பு (International Solar Alliance) ஏற்படுத்தப்பட்டது.

- இந்திரா (INDRA) பயிற்சி - இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் இராணுவங்கள் இணைந்து, உத்திரப் பிரதேச மாநிலம், பாபினா நகரில் 2018 நவம்பர் 18 முதல் 28 வரையில் கூட்டு இராணுவப் பயிற்சியில் (Indian – Russian excercise) ஈடுபடவுள்ளது.
    - இந்த கூட்டு ராணுவப் பயிற்சிக்கு INDRA-2018 எனப்

பெயரிடப்பட்டுள்ளது.

- இந்தியாவின் முதல் வெள்ளப் பெருக்கு மற்றும் ஆரம்ப எச்சரிக்கை அமைப்பு (FFEWS – Flood Forecasting and Early Warning System) கொல்கத்தா நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- குறிப்பு:
  - இந்தியாவின் சுனாமி எச்சரிக்கை மையம் உள்ள இடம் - ஹைதராபாத் [Indian Tsunami Early Warning Center – ITEWC – Hyderabad]

## உலக நிகழ்வுகள்

- IBSAMAR – VI – பயிற்சி → இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய மூன்று நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கும் IBSAMAR – IV என்ற கடற்படை கூட்டுப்பயிற்சி, தென்னாப்பிரிக்காவின் சிமன்ஸ் டவுனில் அக்டோபர் 01 முதல் 13 வரை நடைபெறுகிறது.
  - IBSAMAR கடற்படைக் கூட்டுப் பயிற்சி தொடரில் ஆறாவது பயிற்சி இதுவாகும்.
- குறிப்பு:
  - ஐந்தாவது IBSAMAR கடற்படைக் கூட்டுப்பயிற்சி 2016ம் ஆண்டு கோவாவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## நியமனங்கள்

- இமாச்சல் பிரதேச மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக சூரியகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்குமுன் இமாச்சல் பிரதேச மாநில உயர்நீதி மன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக சஞ்சய் கரோல்-க்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- குறிப்பு:

- இமாச்சல் பிரதேச மாநில உயர்நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு – 1971
- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை இந்தியக் குடியரசுத் தலைவர் விதி 217-ன் படி நியமனம் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்திய உச்சநீதிமன்றத்தின் 46வது தலைமை நீதிபதியாக நீதிபதி (ரஞ்சன் கோகோய் அக்டோபர் 03 அன்று பதவியேற்றுக் கொண்டார். 2019 நவம்பர் 17ம் தேதி வரை, 13 மாதங்கள் இரஞ்சன் கோகோய் தலைமை நீதிபதியாக செயல்படவுள்ளார்.
  - இவர் அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவரே வடகிழக்கு மாநிலங்களில் இருந்து உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக முதல் நீதிபதி ரஞ்சன் கோகோய் ஆவார்.
- குறிப்பு:
  - இந்திய அரசியலமைப்பு விதி – 124ன் படி இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை இந்திய குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

## விருதுகள்

- 2018 ம் ஆண்டின் வேதியியல் துறைக்கான நோபல் பரிசு, பிரான்சின் ஹச் அர்னால்ட், ஜார்ஜ் பி.ஸ்மித் மற்றும் சர் கிரிகிரி பி.வின்டர் ஆகிய மூவருக்கும் இணைந்து வழங்கப்பட்டுள்ளது.
  - அமெரிக்காவைச் சேர்ந்த பிரான்ஸிஸ் ஹெச்.அர்னால்ட் - ன் (Frances H. Arnold) “நொதிகளின் நெறிவழிப்படுத்தப்பட்ட பரிமாணம்” (Directed Evaluation of Enzymes) என்ற ஆய்வுக்காக வழங்கப்பட்டுள்ளது.
  - மற்றொரு அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த ஜார்ஜ் பி.ஸ்மித்(George p. smith) மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த Sir Grogory P. Winter என்பவருக்கும், “நோய் எதிர்ப்புப் பொருள் மற்றும் புரதங்களின் உண்ணிகள்” (Phase display of

Peptides and antibodies) என்ற ஆய்வுக்காக வழங்கப்பட்டுள்ளது.

- அமைதி மற்றும் அஹிம்சையை, தன் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்ததற்காக அமெரிக்காவின் மிக உயரிய விருதாக கருதப்படும் ‘அமெரிக்க பாராளுமன்றத்தின் தங்க பதக்கம்’ என்ற விருதை மகாத்மா காந்திக்கு வழங்குவது என அமெரிக்க பாராளுமன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- குறிப்பு:
    - இதற்கு முன் இவ்விருதானது அன்னை தெரசா (1997), நெல்சன் மண்டேலா (1998), தலாய் லாமா (2008) உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy TM